முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 12/2023

நாள். 01.06.2026 வா.சா.1 – திரு. பிரான்சிஸ் சேவியர்

த/பெ - திரு. இருதய ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) உங்களுக்கு வடக்கன் குளம் சொந்த ஊர் என்றால் சரிதான். நீங்கள் என்ன வேலை பார்த்து வருகிறீர்கள் என்றால் தற்சமயம் விவசாயம் செய்து வருகிறேன். நீங்கள் உங்களுடைய வழக்குரையில் பக்கம் 2 ல் பணகுடி காவல் உதவியாளராக உள்ள அருள் ராஜா என்பவர் வாதிக்கு கொடுக்கப்பட்ட தனிப்பட்ட நெருக்கடி காரணமாக வாதி வேலையை விடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் என குறிப்பிட்டுக்கிளீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் அருள் ராஜா, ஒரு தரப்பு அல்ல என்றால் சரியல்ல. அவருக்கு எதிராகவும் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். உங்கள் மீது பணகுடி காவல் நிலையத்தில் எத்தனை வழக்குகள் உள்ளது என்றால் 10 வழக்குகள் உள்ளன.

2) மேற்படி வழக்குகள் எந்ததெந்த வருடத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் குற்ற எண். 234 , 2015 ம் வருடத்திலும், குற்ற எண். 367, 2015 லிலும், குற்ற எண். 493, 2015 ம் வருடத்திலும், குற்ற எண். 340, 2016 ம் வருடத்திலும், குற்ற எண். 221, 2017 ம் ஆண்டிலும், குற்ற எண்.257, 2019 ம் வருத்திலும், குற்ற எண்.612, 2019 ம்

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.01 17:29:43 +0530

ஆண்டிலும், குற்ற எண்.237, 2020 ம் ஆண்டிலும், குற்ற எண்.311, 2022 ம் ஆண்டிலும், குற்ற எண்.333, 2022 ம் ஆண்டிலும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் 8 வழக்குகள் தாக்கல் செய்த காலத்தில் இந்த வழக்கு பிரதிவாதி பணகுடி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி புரிய வில்லை என்றால் சரிதான். 2022 ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட காலத்தில் தான் பிரதிவாதி பணகுடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளையும் தனசேகரன்என்ற சிறப்பு உதவி ஆய்வாளர் தான் பதிவு செய்தார் என்றால் சரிதான். குற்ற எண். 333/2022 ல் பேச்சியம்மாள் என்ற காவலர் தான் புகார் தாரர் ஆவார் என்றால் சரிதான்.

3) குற்ற எண். 311/2022 ல் ஞானரவிச்சந்திரன் என்பவர் புகார்தாரர். ஞானரவிச்சந்திரன் உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு உடன் பிறந்த சகோதரர் ஆவார். மேற்படி 2 குற்ற எண்களிலும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் குற்ற எண். 311/2022 சமீபத்தில் தான் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. குற்ற எண். 333/2022 குற்ற இறுதி அறிக்கை எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்று தெரியவில்லை. குற்ற இறுதி அறிக்கை இந்த வழக்கு பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.01 17:29:47 +0530

வழக்கின் முதல் தகவல் அறிக்கையையும் இவ்வழக்கு பிரதிவாதி பதிவு செய்யவில்லை , வழக்கை விசாரித்து இறுதி குற்ற அறிக்கையையும் இவ்வழக்கு பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. எனவே மேற்படி வழக்குகளுக்கும், இப்பிரதிவாதிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது.

4) பொய்யாக இவ்வழக்கை பிறர் தூண்டுதலில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி காவல் ஆய்வாளர் என்பதால் நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என் வீட்டில் வந்து போலிஸ் அதிகாரியாக மிரட்டியதாலும், நான் கொடுத்த புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காததாலும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி அரசு அதிகாரி என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றால் உரிமையியல் நடைமுறை திருத்தச் சட்டம் பிரிவு 80 (1) ன் கீழ் அறிவிப்பு அனுப்பியுள்ளீர்களா என்றால் அனுப்பியுள்ளேன். மேற்படி அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5) உரிமையியல் நடைமுறை திருத்தச் சட்டம் பிரிவு 80 (1) ன் கீழ் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்று உங்கள் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. உரிமையியல் நடைமுறை திருத்தச் சட்டம் பிரிவு 80 (1) ன் கீழ் நீங்கள் எந்தவித அறிவிப்பும் அனுப்பவும் இல்லை. அனுப்புவதில் இருந்து விலக்களிக்க கோரி சமூகம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யவும் இல்லை என்றால் சரியல்ல.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.01 17:29:52 +0530

குற்ற எண். 311/2022, குற்ற எண். 333/2022 வழக்குகளை ரத்து செய்ய கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அவை நிலுவையில் உள்ளன. மேற்படி மனுவில் இடைகால தடை எதுவும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி வழக்குகள் உண்மையான வழக்குகள் என்பதால் தான் இடைகால தடை எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.01 17:29:56 +0530